பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
22 11 2026 SUNDAY - 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பொதுமக்கள் தங்கம் வாங்குவதை குறைத்துக் கொண்டுள்ளதன் மூலம், அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- மக்களின் அன்றாட வாழ்விற்கு பயன்படும் வகையில், அறிவியல் ஆராய்ச்சிகள் இருக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

- தேசிய மாணவர் படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

- நைஜீரியாவில் இன்று நேரிட்ட படகு விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர்.

- நியூஸிலாந்துக்கு எதிரான ஹாக்கிப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

>>>>>>><<<<<<<

பொதுமக்கள் தங்கம் வாங்குவதை குறைத்துக் கொண்டுள்ளதன் மூலம், அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழல் காரணமாக, கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ள நிலையில், அந்நிய செலாவணி கையிருப்பை பராமரிக்க ஏதுவாக, மக்கள் தங்கம் வாங்குவதை குறைக்க வேண்டும் என்ற தனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளதை இது பிரதிபலிக்கும் வகையில் உள்ளது என்று கூறினார்.

இதன்மூலம், தங்கத்தின் விலை குறைந்துள்ளதுடன், மக்களின் சேமிப்பும் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

உடல் நலத்தை பராமரிப்பதற்கான பயிற்சியாகவும், போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசு கட்டுப்பாட்டை குறைக்கவும் சைக்கிள் பயணம் உதவிடும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் ஞாயிறு தோறும் சைக்கிள் பேரணியை தொடங்கி வைத்து பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

நாடுமுழுவதிலும் உள்ள இளைஞர்களுக்கு உடல்நலம் குறித்தும், போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த சைக்கிள் பேரணி நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

நாடுமுழுவதும் 26 ஆயிரம் இடங்களில் இந்த சைக்கிள் பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

சமூக பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கும், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் மூத்த குடிமக்களின் நல்வாழ்விற்கும் உதவிடும் வகையில், பல்வேறு நிறுவனங்களுடன் 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக தெரிவித்தார்.

பல்கலைக் கழகங்கள், ஊரக மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் உதவியுடன், இளையோருக்கு மேம்பட்ட திறன் பயிற்சி, வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

ஏழைகளுக்கு சுயசார்புடன் கூடிய கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மக்களின் அன்றாட வாழ்விற்கு பயன்படும் வகையில், அறிவியல் ஆராய்ச்சிகள் இருக்க வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

நாட்டின் உயிரி பொருளாதாரத்தை, 2047ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவதை இலக்காக கொண்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் விவசாயிகளின் நலனை மையமாக கொண்டு வகுக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை இணையமைச்சர் திரு. Bhagirath Choudhary தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற இந்திய உணவு மற்றும் வேளாண் நடைமுறைகள் குறித்த தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது, உணவு பாதுகாப்பை உறுதி செய்வது, விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவது போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பூச்சிக்கொல்லி மற்றும் ரசாயன உரங்களை சமச்சீரான முறையில் பயன்படுத்துவதன் மூலம், நச்சுத் தன்மையற்ற வேளாண் உற்பத்தியை உறுதி செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இறக்குமதியை சார்ந்துள்ள நிலையை தவிர்த்து, வேளாண் நடைமுறைகளில் உள்நாட்டு தயாரிப்புகளை பயன்படுத்துமாறும், இயற்கை வேளாண் நடைமுறைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறும் திரு. Bhagirath Choudhary வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

ராஜஸ்தான் மாநிலம், கோட்டாவில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், இந்த விபத்து மனவேதனையை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதி வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

தேசிய மாணவர் படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்த தினத்தை ஒட்டி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசிய மாணவர் படை ஒழுக்கம், ஒருமைப்பாட்டுடன், நாட்டிற்கு தன்னலமற்ற சேவையாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

இளையோர், தலைமைத்துவத்துடன் கூடிய பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்ள இந்த அமைப்பு உறுதுணையாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் இளைஞர்களின் திறனை பிரதிபலிக்கும் வகையில் தேசிய மாணவர் படை செயலாற்றி வருவதாக திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<

ரஜோரி மாவட்டத்தில் Kesri மலைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான நவீன வசதிகளுடன் கூடிய விடுதி அமைப்பதற்கு ஜம்மு கஷ்மீர் அரசுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடுதி, எட்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜம்மு கஷ்மீரில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும், வளமான இயற்கை அழகு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையிலும் உள்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>>>><<<<<<<

குளிர்காலம் தொடங்குவதை ஒட்டி, ஜம்முவில் பள்ளிகளின் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக ஜம்மு கஷ்மீர் பள்ளிக்கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அனைத்து அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள், காலை 10.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

இந்தியா - பல்கேரியா இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் டாக்டர் *Velislava*-வுடன் நடத்திய பேச்சுவார்த்தை, ஆக்கபூர்வமாக அமைந்ததாக கூறப்பட்டுள்ளது.

வர்த்தகம், முதலீடு, உள்கட்டமைப்பு, அறிவியல், தொழில்நுட்பம், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<<

நைஜீரியாவில் இன்று நேரிட்ட படகு விபத்தில் *24* பேர் உயிரிழந்தனர்.

Beyalsa மாகாணத்தின் தென் பகுதியில் உள்ள ஆற்றில், அதிக பயணிகளை ஏற்றிச் சென்றதன் காரணமாக இந்த படகு கவிழ்ந்து, விபத்துக்குள்ளானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்திலிருந்து மேலும் *24* பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போனவர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<<

பஹ்ரைனில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்காவின் பேட்ரியாட் வான் தடுப்பு அமைப்புகளை குறிவைத்து, ஏவகணை மற்றும் ட்ரோன் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரானில் உள்ள விமானத் தளங்கள் மீது அமெரிக்கா தொடர்ந்து நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் *F.16* போர் விமானத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக ஈரான் கூறிய குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மறுத்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள ராணுவ தளங்களில் அமெரிக்க போர் விமானங்கள், பாதுகாப்புடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

ஆக்லாந்தில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான ஹாக்கிப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டியில் வெற்றி பெற்றிருந்த நிலையில், அடுத்த இரண்டு போட்டிகளும் டிராவில் முடிவடைந்ததை அடுத்து, 1-0 என்ற போட்டிக்கணக்கில் இந்தியா தொடரை வென்றது.

>>>>>>>><<<<<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூஸிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 119 ரன் எடுத்துள்ளது

வெலிங்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 720 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 368 ரன் எடுத்தது.

>>>>>>>><<<<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில், கோவா அணி இன்று மோஹன் பகான் அணியை எதிர்கொள்கிறது.

Margoa-வில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

>>>>>>>END<<<<<<<